**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **CC513/2004** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of witness for | Prosecution : | **PW - 48** |
| | Defence : | |
| | Court : | |
| Name | : | சிங்காரம் |
| Father's / Husband Name | : | காத்தையன் |
| Village | : | மேட்டுப்பட்டி, தெற்கு காலனி, குருங்குளம், தஞ்சாவூர் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2018 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.09.2018**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.கண்ணகி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, தட்டச்சர் ச.சுரேஷ்**

**CC513/2004** Date: 05.09.2018

முதல் விசாரணை

நான் தஞ்சாவூர் மாவட்டம் மேட்டுப்பட்டி, தெற்கு காலனி, குருங்குளம் என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். அசா1ஐ தெரியாது. 1வது எதிரியை தெரியும் வழக்கின் மற்ற எதிரிகளை தெரியாது. கடந்த 1999ஆம் ஆண்டு என் மகள் இளவரசி என்பவரின் பெயரில் காமதேனு சிறுசேமிப்பு திட்டத்தில் தஞ்சாவூர் காசிக்கடைத்தெருவில் உள்ள கணபதி ஜுவல்லரி என்ற கடையில் காமதேனு சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து மாதம் ரூபாய் 150ஐ செலுத்தி வந்தேன். மொத்தம் 25மாதங்கள் செலுத்திவந்தேன். மொத்தம் ரூபாய் 3750கட்டியிருந்தேன். கடைசியாக 2001ஆம் வருடம் கடைசி தவணை செலுத்தியபிறகு அடுத்த மாதம் கடைக்கு சென்றபோது கடையில் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றும் நாளை மறுநாள் வருமாறு 1வது எதிரி கூறினார். மறுநாள் கடைக்கு சென்று பார்த்தபோது கடை பூட்டியிருந்தது. பின்னர் தின நாளிதழில் பார்த்தபோது 1வது எதிரி பல நபர்களிடமிருந்து நகைக்காக பணம் பெற்றுக்கொண்டு ஏமாற்றி விட்டதாக தெரியவந்தது. நானும், என்னுடன் பணம் செலுத்தியவர்களும் சேர்ந்து ஆய்வாளரிடம் புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் பணம் செலுத்தியதற்கான பாஸ் புத்தகம் எண் ஏ1192 ஆகும். அது சா.பொ.87ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

தஞ்சாவூர் காசுக்கடைத்தெருவில் கணபதி ஜுவல்லரி என்ற கடையே இல்லையென்றாலும், காமதேனு சிறுசேமிப்பு திட்டம் என்ற திட்டமே இல்லையென்றாலும், நான் முன்விசாரணையில் சொல்லியுள்ளவாறு மேற்படி திட்டத்தில் சேரவே இல்லையென்றாலும், அதே போல் தொகை எதுவும் செலுத்தவில்லையென்றாலும் சரியல்ல. சா.பொ.87 இவ்வழக்கிற்கு சம்மந்தப்படாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. நான் மாவட்ட குற்றப்பிரிவு போலீசாரிடம் எழுத்துப்பூர்வமாக புகார் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் முன் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.